**மாவட்ட திட்ட ஒருங்கிணைப்பாளர் மற்றும் முதன்மைக் கல்வி அலுவலரின் செயல்முறைகள்**
**முன்னிலை : திரு. சா.மார்ஸ்**
**ந.க.எண். 25 /ஒபக/ 2020, நாள்:24.11.2020**

பொருள்: ஒருங்கிணைந்த பள்ளிக்கல்வி (இடைநிலை) – வேலூர் மாவட்டம் – கலா உத்சவ் – பள்ளி அளவில் கலை விழா போட்டிகள் நடத்திட வழிகாட்டல் நெறிமுறைகள் வழங்குதல் –சார்பு.

பார்வை: மாநிலத் திட்ட இயக்குநர், ஒருங்கிணைந்த பள்ளிக்கல்வி, சென்னை–6 அவர்களின் செயல்முறைகள் ந.க.எண். 636/C3/KalaUtsav/SS/2020–21, நாள். 23.11.2020

------

ஒருங்கிணைந்த பள்ளிக்கல்வி வாயிலாக மாணவர்/மாணவியர் கலைத் திறனை ஊக்குவிக்கவும், நமது பாரம்பரிய மற்றும் நாட்டுப்புற கலை வடிவங்களை மீட்டெடுத்து உயிர்ப்போடு வைத்திருக்கவும், மாணவர்களைக் கொண்டு இக்கலைகளை வளர்த்தெடுக்கவும் கலா உத்சவ் எனும் போட்டி பள்ளி, மாவட்ட, மாநில மற்றும் தேசிய அளவில் 2015 ஆம் ஆண்டு முதல் நடத்தப்பட்டு வருகிறது. இந்த ஆண்டு பள்ளி, மாவட்ட, மாநில மற்றும் தேசிய அளவிலான கலா உத்சவ் போட்டிகள் முழுவதும் Online மூலமாகவே தனிநபர் போட்டிகள் 9 முதல் 12–ம் வகுப்பு வரை நடைபெற உள்ளது. இப்போட்டிகள் யாவும் கீழ்க்கண்ட 9 வகையான தலைப்புகளில் மாணவ / மாணவியருக்கென தனித்தனியே நடைபெறவுள்ளது.

1. வாய்ப்பாட்டு இசை – செவ்வியல் (Classic)
2. வாய்ப்பாட்டிசை – பாரம்பரிய நாட்டுப்புற வகை (Traditional Folk)
3. கருவி இசை –செவ்வியல்
4. கருவி இசை – பாரம்பரிய நாட்டுப்புற வகை
5. நடனம் – செவ்வியல்
6. நடனம் – பாரம்பரிய நாட்டுப்புற வகை
7. காண்கலை (இருபரிமாணம்)
8. காண்கலை (மூன்று பரிமாணம்)
9. உள்ளூர் தொன்மை பொம்மைகள் – விளையாட்டுகள்

மாவட்ட அளவிலான கலா உத்சவ் போட்டிகள் அனைத்து அரசு / அரசு நிதியுதவி / ஆதி–திராவிட / நகராட்சி / மெட்ரிக் உயர் / மேல்நிலைப் பள்ளிகளில் 9 முதல் 12–ம் வகுப்பு வரை பயிலும் மாணவ/மாணவிகளுக்கு கீழ்க்கண்ட தேதிகளில் நடைபெறவுள்ளது. போட்டிகள் Online மூலம் நடைபெறுவதால் பங்கேற்பாளர்கள் தங்களின் படைப்புகளை குறுந்தகட்டில் (CD) பதிவு செய்து 01.12.2020 அன்று காலை 10 மணிக்குள் காட்பாடி, காந்திநகர் மாவட்ட திட்ட அலுவலகத்தில் ஒப்படைத்து தங்கள் பெயரை பதிவு செய்து கொள்ளுமாறு கேட்டுக்கொள்ளப்படுகிறார்கள்.

பங்கு பெறும் அனைத்து பங்கேற்பாளர்களுக்கும் பங்கேற்பு சான்றிதழ், போட்டியில் முதல் மூன்று இடம் பெறும் மாணவ / மாணவிகளுக்கும் கேடயம் மற்றும் சான்றிதழ்கள் வழங்கப்படும்.

அனைத்து தலைமையாசிரியர்கள்/முதல்வர்கள் பொறுப்பு ஆசிரியர்களை நியமித்து மாணவர்களுக்கு ஊக்கமளித்து ஒவ்வொரு பள்ளியிலும் தவறாமல் ஒரு போட்டியிலாவது பங்கேற்க செய்யுமாறு கேட்டுக்கொள்ளப்படுகிறார்கள்.

| வ. எண் | மாவட்டம் | நடைபெறும் நாள் மற்றும் நேரம் | போட்டி நடைபெறும் இடம் |
|---|---|---|---|
| 1 | வேலூர் வருவாய் மாவட்டம் | 01.12.2020 காலை 10.00 மணி முதல் | மாவட்ட திட்ட அலுவலகம், காந்தி நகர், காட்பாடி |
| 2 | இராணிப்பேட்டை வருவாய் மாவட்டம் | | |
| 3 | திருப்பத்துார் வருவாய் மாவட்டம் | | |

குறிப்பு:–

**<u>CDயில் பதிவேற்றம் செய்யும் முறை</u>**

**பதிவு செய்வதற்கு முன்னர் பங்கேற்பாளர்கள் (போட்டியின் வகை, மாணவ/மாணவியர் பெயர், வகுப்பு, பள்ளியின் பெயர், மாவட்டம்) தங்களை அறிமுகம் செய்து கொள்ள வேண்டும். நிகழ்ச்சியின் கால அளவு 4–6 நிமிடத்திற்குள் இருத்தல் வேண்டும்.**

**நடனம் : –**

தொடக்கம் முதல் இறுதி வரை முழுமையாக திரை வடிவினை பதிவு செய்ய வேண்டும்.

**வாய்ப்பாட்டு இசை மற்றும் கருவி இசை :–**

பங்கேற்பாளர்களின் முழு உருவம் மற்றும் இசைக்கருவிகள் முழுமையாக திரையில் தோன்று மாறும், இசைப்பதிவு தெளிவாகவும் பதிவு செய்யப்பட வேண்டும்.

**காண்கலை மற்றும் உள்ளூர் தொன்மை பொம்மைகள் :–**

படைப்பின் ஆரம்பம் முதல் இறுதிவரை பங்கேற்பாளரின் செயல்பாடுகள் மற்றும் இறுதிவடிவம் முழுமையாக பதிவு செய்யப்பட வேண்டும்.

படைக்கப்படும் நிகழ்ச்சி குறித்த கருத்துச் சுருக்கம் ஒவ்வொரு வார்த்தைகளுக்கும் மிகாமல் கலை வடிவம் தோன்றிய இடம், கையாளும் சமூகப் பிரிவு, நிகழ்த்தப்படும் தருணங்கள், பயன்படுத்தப்படும் அலங்கார உடைகள், பக்க வாத்தியங்கள், பயன்படுத்தப்படும் பொருள்கள் சமூகச் சூழலில் அக்கலையின் தொடர்பு, நுட்பங்கள் பிற பொருட்கள் முதலியன பற்றிய விவரங்கள் பங்கேற்பாளரால் எழுதி சமர்ப்பிக்கப்பட வேண்டும்.

குறிப்பிட்ட காலத்திற்குள் சிடியாக ஒப்படைக்க இயலாத பள்ளிகள் rmsavel@gmail.com மின்னஞ்சல் முகவரிக்கோ அல்லது கீழ்க்கண்ட வாட்ஸ்அப் எண்ணிற்கோ **01.12.2020** காலை **10** மணிக்குள் அனுப்பிட கேட்டுக்கொள்ளப்படுகிறது.

தொடர்பு கொள்ள வேண்டிய அலைபேசி எண் : –

ADPC – 9791969510
Vellore EDC – 9443072723
Thirupathur EDC -6380535467

**மாவட்ட திட்ட ஒருங்கிணைப்பாளர்**
**மற்றும் முதன்மைக்கல்வி அலுவலர் (ஒபக)**
**வேலூர்–9.**

**இணைப்பு**

மாநில திட்ட இயக்குநர் அவர்களின்
கலா உத்சவ் வழிகாட்டு நெறிமுறைகள் (Annexure II)

**பெறுநர்**

அரசு / அரசு நிதியுதவி / ஆதி–திராவிட / நகராட்சி / மெட்ரிக் உயர் / மேல்நிலைப் பள்ளி தலைமையாசிரியர்கள் / முதல்வர்கள்.

**நகல்**

1. மாநிலத் திட்ட இயக்குநர்,ஒருங்கிணைந்த பள்ளிக்கல்வி, சென்னை–6 அவர்களுக்கு பணிந்து அனுப்பலாகிறது.
2. முதன்மைக்கல்வி அலுவலர்கள் இராணிப்பேட்டை மற்றும் திருப்பத்தூர்
3. மாவட்டக்கல்வி அலுவலர்கள் வேலூர், இராணிப்பேட்டை, அரக்கோணம், வாணியம்பாடி, திருப்பத்தூர்
4. அலுவலக கோப்பிற்கு.